ஆண்களை விட பெண்கள் அதிகம்

தமிழகத்தில் 6 கோடியே 13 லட்சம் வாக்காளர்கள்

சென்னை, பிப்.15

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் தமிழகத்தில் 6 கோடியே 13 லட்சம் வாக்காளர்கள் இடம்பெற்று உள்ளனர். ஆண்களை விட பெண்கள் 8 லட்சம் பேர் அதிகம் உள்ளனர்.

1.1.2020ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் 23–ந்தேதி வரைவுப் பட்டியல் வெளியிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து அன்றைய தினத்தில் இருந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்த, இடம் மாற்றம் செய்ய விண்ணப்பங்கள் கடந்த மாதம் 22 ந்தேதி வரை பெறப்பட்டன.

மேற்கண்ட சிறப்பு சுருக்கமுறை திருத்த காலத்தின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்காக 14,65,890 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 14,02,464 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பெயர் நீக்கலுக்காக 1,18,681 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகிய காரணங்களுக்காக 97,155 பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

பதிவுகளில் திருத்தங்கள் செய்யக்கோரி 1,78,409 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,22,817 ஏற்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்யக்கோரி 1,14,790 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 90,943 ஏற்கப்பட்டு உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சோழிங்கநல்லூரில் அதிக வாக்காளர்கள்

இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி தமிழ்நாட்டில் 6,13,06,638 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளனர். இதில் ஆண்கள் 3,02,54,172 பேரும், பெண்கள் 3,10,45,969 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 6,497 பேரும் அடங்குவர். ஆண்களை விட பெண்கள் 7 லட்சத்து 91 ஆயிரத்து 797 பேர் அதிகம் ஆவார்கள். சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இங்கு மொத்தம் 6,60,317 வாக்காளர்கள் உள்ளனர். குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,73,337 ஆவார்கள். வெளிநாடுவாழ் வாக்காளர்கள் 16 பேரின் பெயர்களும் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

16 லட்சம் புதிய வாக்காளர்கள்

2020–ம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தில் 18–19 வயதுள்ள 5,85,580 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 3,22,167 பேரும், பெண்கள் 2,63,213 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 200 பேரும் அடங்குவர். வாக்காளர் பட்டியல்களை http://elections.tn.gov.in எனும் தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்தில் காணலாம். பெயரைச் சரிபார்க்கலாம்.

வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறை தற்போது செயல்பாட்டில் உள்ளது. 1.1.2020 அன்று 18 வயது நிரம்பிய தகுதியுள்ள நபர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் இருந்தால் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6ஐ சமர்ப்பித்தும், www.nvsp.in என்ற இணையதளத்திலும், கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து ' Voter Helpline App ' என்ற செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலமும் விண்ணப்பிக்கலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாவட்ட தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட தொடர்பு மையங்களை 1950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்கள் இந்த மையங்களைத் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 180042521950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணுடன் மாநிலத் தொடர்பு மையம் இயங்கி வருகின்றது.

மேற்கண்ட தகவல் தமிழக அரசின் தலைமை தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆர்.கே.நகர் பகுதி தண்டையார்பேட்டையில் உள்ள சவுந்தரபாண்டியன் சுப்பம்மாள் மேல்நிலைப்பள்ளி பள்ளியில் (40 வது கிழக்கு வட்டம்) உள்ள மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை அவைத்தலைவர் இ.மதுசூதனன், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தலைவரும் வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட கழக செயலாளருமான ஆர்.எஸ்.ராஜேஷ் ஆகியோர் வழங்கினர். இதில் பள்ளி தாளாளர் மாணிக்கவாசகம், தலைமை ஆசிரியர் பாக்கியசெல்வி, மற்றும் ஆர். எஸ். ஜெனார்தனம், ஏ.கணேசன், இ.வேலுமேஸ்திரி, புருஷோத்தமன், ஆட்டோ தேவராஜ், வண்ணை கணபதி, இளம்எஸ் நிர்மல் குமார், எல்.எஸ். மகேஷ்குமார், ஹரிகிருஷ்ணன், நடராஜன், முரளிமுருகன், எஸ்.மோகன், ஜி.ஜானி, டி.எம்.ஜி.குமார், நெல்லை கே.குமார், பி.சேகர், உள்ளிட்ட பலர் இருந்தனர்.

சென்னையில் 16 தொகுதிகளில் 39 லட்சத்து 47 ஆயிரம் வாக்காளர்கள்

புதிதாக 60 ஆயிரம் பேர் சேர்ப்பு

சென்னை, பிப்.15

சென்னையில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாநகராட்சி கமிஷனர் வெளியிட்டார். இதில் 18 வயது பூர்த்தியான 60 ஆயிரம் புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாநகராட்சியில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான 2020–ம் ஆண்டு வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்யும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது.

இந்த பணி தற்போது முடிவடைந்துள்ளது.

இந்தநிலையில் சென்னை மாநகராட்சி கமிஷனர் கோ.பிரகாஷ் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோர் நேற்று ரிப்பன் மாளிகையில் அண்ணா தி.மு.க முன்னாள் எம்.பி. வெங்கடேஷ் பாபு, தி.மு.க பகுதி செயலாளர் எஸ்.மதன் மோகன், தமிழக காங்கிரஸ் துணைத் தலைவர் தாமோதரன், தமிழக பா.ஜ.க நிர்வாகி ஜெய்சங்கர் உள்பட பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் 2020ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை வெளியிட்டனர்.

இதையடுத்து கமிஷனர் கோ.பிரகாஷ் நிருபர்களிடம் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் இந்தியதேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை திருத்தி வெளியிடுவது வழக்கம். இதில் வாக்காளர் பட்டியலில் 18 வயது பூர்த்தியடைந்தவர்களின் பெயர்களை சேர்த்தல், இறந்தவர்களின் பெயர்களை நீக்குதல் தொடர்பான திருத்தங்கள் மேற்கொண்டு புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

இந்த திருத்த பணிகளுக்கு முன்னர் சென்னை மாநகராட்சியில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளில் 38 லட்சத்து 88 ஆயிரத்து 673 வாக்காளர்களாக இருந்தது.

பின்னர் சிறப்பு சுருக்க திருத்தம் செய்யும் கால கட்டத்தில் 65 ஆயிரத்து 215 சேர்த்தல் விண்ணப்பங்களும், 3 ஆயிரத்து 384 பெயர் நீக்கம் விண்ணப்பங்களும், 14 ஆயிரத்து 155 திருத்த விண்ணப்பங்களும் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டது. மொத்தமாக 82 ஆயிரத்து 754 மனுக்கள் பெறப்பட்டது.

இந்த திருத்த பணிகளுக்கு பிறகு 59 ஆயிரத்து 905 பெயர் சேர்த்தல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1,786 பெயர் நீக்கம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 9 ஆயிரத்து 809 பிழை திருத்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மொத்தம் 71 ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

இதனால் தற்போது 16 சட்டமன்ற தொகுதியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 39 லட்சத்து 46 ஆயிரத்து 792 ஆக மாறியுள்ளது.

இது முன்பு இருந்த வாக்காளர் பட்டியலை காட்டிலும் 1.46 சதவீதம் அதிகம் ஆகும். 18 வயது பூர்த்தி அடைந்த சுமார் 60 ஆயிரம் புதிய வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதில் 1 லட்சத்து 73 ஆயிரத்து 337 வாக்காளர்களுடன் குறைந்த வாக்காளர் எண்ணிக்கை கொண்ட தொகுதியாக துறைமுகம் சட்ட சட்டமன்ற தொகுதி விளங்குகிறது. இதேபோல் 3 லட்சத்து 6 ஆயிரத்து 347 வாக்காளர்களுடன் அதிக வாக்காளர் எண்ணிக்கை கொண்ட தொகுதியாக வேளச்சேரி சட்டமன்ற தொகுதி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடும் போது துணை கமிஷனர் பி.குமாரவேல் பாண்டியன் உள்ளிட்ட பல அதிகாரிகள் உடன் இருந்தனர்.

சட்டமன்ற தொகுதியின் பெயர்	ஆண்கள்	பெண்கள்	இதரர்	மொத்தம்
ஆர்.கே.நகர்	1,23,147	1,32,132	102	2,55,381
பெரம்பூர்	1,49,076	1,53,440	65	3,02,581
கொளத்தூர்	1,34,286	1,39,470	65	2,73,821
வில்லிவாக்கம்	1,23,784	1,28,301	62	2,52,147
திரு.வி.க.நகர் (தனி)	1,04,327	1,10,561	51	2,14,939
எழும்பூர் (தனி)	92,315	93,921	54	1,86,290
ராயபுரம்	90,175	93,779	49	1,84,003
துறைமுகம்	90,333	82,952	52	1,73,337
சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி	1,13,079	1,17,181	29	2,30,289
ஆயிரம் விளக்கு	1,16,167	1,21,113	86	2,37,366
அண்ணா நகர்	1,36,897	1,41,439	81	2,78,417
விருகம்பாக்கம்	1,39,262	1,39,598	84	2,78,944
சைதாப்பேட்டை	1,35,115	1,39,729	72	2,74,916
தியாகராயநகர்	1,16,111	1,18,899	42	2,35,052
மயிலாப்பூர்	1,27,707	1,35,219	36	2,62,962
வேளச்சேரி	1,51,775	1,54,489	83	3,06,347
மொத்தம்	**19,43,556**	**20,02,223**	**1,013**	**39,46,792**

நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு: 36 ஊழியர்கள் பணி இடைநீக்கம்

தஞ்சை, பிப்.15

தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேட்டில் ஈடுபட்ட 36 ஊழியர்களை பணிஇடை நீக்கம் செய்து அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் சாகுபடி நடைபெறும். தற்போது சம்பா, தாளடி அறுவடை பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்முதல் செய்ய தஞ்சை மாவட்டத்தில் 389 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் நிலையங்களில் ஒரு மூட்டைக்கு ரூ.40 பிடித்தம் செய்வதை கைவிட வேண்டும். கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இந்த நிலையில் கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகள் எதுவும் நடைபெறாமல் தடுக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் கொண்ட 3 குழுவினர் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 12ந் தேதி முதல் ஆய்வு செய்து வருகின்றனர்.

அவர்கள் ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திற்கும் நேரில் சென்று நெல் தூற்றப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறதா? நெல் மூட்டைகளின் எடை சரியாக இருக்கிறதா? என ஆய்வு மேற்கொண்டனர். அப்போது 15 கொள்முதல் நிலையங்களில் நெல் தூற்றாமல் கொள்முதல் செய்யப்பட்டதும், நெல் மூட்டைகளின் எடை கூடுதல் மற்றும் குறைவாக இருந்ததும் தெரிய வந்தது.

இந்த முறைகேட்டிற்கு காரணமான 13 எழுத்தர்கள், 2 உதவியாளர்கள் என மொத்தம் 15 பேரை பணி இடை நீக்கம் செய்து நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

எடை குறைவு

இதே போல் திருவாரூர் மாவட்டத்திலும் முறைகேடு நடந்துள்ளது. இது குறித்து திருவாரூர் கலெக்டர் ஆனந்த் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் 463 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை தலைமை அலுவலக விழிப்பு பணிக்குழு தலைமையிலான சிறப்பு ஆய்வுக்குழுவினர் 2 நாட்கள் ஆய்வு செய்தனர்.

இதில் ஒரு சில நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளில் தர வேறுபாடு, மூட்டைகளில் எடை அளவு குறைபாடு போன்றவை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக 14 பட்டியல் எழுத்தர்கள், 7 உதவியாளர்கள் என மொத்தம் 21 பேர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

பொது அறிவிப்பு

மாண்பமை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் முன்பாக
சென்னை அமர்வு, சென்னை
எம்ஏ எண். 1080 ஆப் 2019
இன்
சிபி எண். 976/1பி/2018

வினோத் ராதாகிருஷ்ணன் நாயர் (லிக்விடேட்டர்) ... மனுதாரர்
எதிர்
என்சலண்ட் மரைன் லைன் பிரைவேட் லிமிடெட் மற்றும் இதர நபர்கள் ...பிரதிவாதிகள்
விஷயத்தில்
M/S VS & B கன்டெய்னர்ஸ் (எல்.எல.சி.) ... மனுதாரர்
எதிர்
M/S என்சலண்ட் மரைன்லைன் இந்தியா பிரைவேட் லிமிடெட் ...பிரதிவாதிகள்
பிரதிவாதிகளுக்கு

1. சவுந்தரராஜன் வாசுகி (இயக்குனர், என்சலண்ட் மரைன்லைன் இந்தியா பிரைவேட் லிமிடெட்)
பழைய எண். 474, புதிய எண். 336, எஸ்கேசி மெயின் ரோடு,
ஈரோடு, தமிழ்நாடு 638 009.
2. சுந்தரம் ராஜா டோனி ராஜா (இயக்குனர், என்சலண்ட் மரைன்லைன் இந்தியா பிரைவேட் லிமிடெட்)
25/12, பழைய அமரன்ஜிபுரம் மெயின், ராயபுரம், சென்னை தமிழ்நாடு 600013.
3. அமித் என்டர்பிரைசஸ்,
கதவு எண். 113–134, யூனிட் எண். 801, 8வது தளம், ரஹேஜா டவர்ஸ், அண்ணா சாலை, சென்னை 600 002.

மனு விசாரணை பற்றிய அறிவிப்பு

சென்னையில் உள்ள மாண்பமை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாய அமர்வில் சிபி எண். 976/1பி/2018ல் எம்ஏ எண். 1080 ஆப் 2019ஐ தற்போது மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

மேற்கண்ட நிறுவனத்தின் மனுவில் தாக்கல் செய்யப்பட்ட இதர விண்ணப்பத்தில் மேலே பிரதிவாதிகளுக்கு விசாரணை அறிவிப்பு சரியாக வழங்கப்படவில்லை என்பதால், இந்த பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது. எனினும், சென்னை தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தில் விசாரணைக்காக பட்டியலிடப்பட்ட மேற்கண்ட மனு 04 மார்ச் 2020 அன்று காலை 11.00 மணிக்கு வருவதால் மேற்சொன்ன பிரதிவாதிகள் அல்லது அதன் பிரதிநிதிகள் அவர்களது பதிலை அளிக்க வேண்டும்/ஆஜராக வேண்டும்.

மேற்சொன்ன மனுவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் எந்தவொரு நபரும், அவரது நோக்கத்தை அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ அவர்களது பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்டு விசாரணை நடக்கும் தேதிக்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக லிக்விடேட்டருக்கு அனுப்ப வேண்டும்.

மனுவின் நகல் மற்றும் இணைப்புகள் ஆகியவை எவருக்கேனும் தேவைப்படின் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி கீழ்க்கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்/–வினோத் ராதாகிருஷ்ணன் நாயர் (லிக்விடேட்டர்)
முகவரி: ஏ–108, ஓம் ரச்சனா CHS, செக்டார் 17,
வஷி நவி மும்பை 400705.
Mobile No: +9170395 00000
Email id-vinod@nairca.com

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து) விதி 8–(1)

கீழே கையொப்பமிட்டுள்ள ஐஇஎச்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) (ஐஇஎச்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறையின் கீழும் கடன்தாரர்கள்/ உடன்கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கெடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைகளுக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து ஐஇஎச்எல்–க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித விலைங்கும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப்பிரிவு 13, துணைப்பிரிவு 8ன்படி கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது யாதெனில், ''ஐஇஎச்எல்''–க்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றை கடன்தாரர் விற்பனை அல்லது மாற்ற நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக எப்போது கட்டினாலும் ஈடு பெற்ற ஆஸ்திக்கள் ஐஇஎச்எல்–ஆல் விற்பனை செய்யப்படாது அல்லது மாற்றப்படாத மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்க அல்லது மாற்றும் நடவடிக்கைகளை ஐஇஎச்எல் மேற்கொள்ளாது.

கடன்தார்(கள்) பெயர் சென்னை கிளை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து)	செலுத்த வேண்டிய பாக்கித்தொகை (ரூ.)	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீன அறிவிப்பு தேதி
திரு. டார்வின் ஜோஸ் J, கிறிஸ்டல் ரெஜீT, R.R. லெதர்ஸ் (புரான்பெக்ட் எண்.785742)	ப்ளாட் எண். சி–105 என்ற சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். 1வது மாடி, சி பிளாக், இஷா அபிருபம், சூப்பர் கட்டப் பகுதி 868 சதுர அடி (பொதுவான பகுதி உட்பட) மற்றும் 51349.76 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு 518.48 சதுர அடி நிலம். வெங்கம்பாக்கம் பிரதான சாலை மற்றும் பல்ராம் நகர் 1வது பிரதான சாலை, காஸ்பாபுரம் கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம், தமிழ்நாடு	ரூ.30,25,967/–	07.12.2019	12.02.2020

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– 10/01, 56L, 9வது மாடி, பாஸ்கான் பிபூச்சேரா டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 017 /அல்லது காப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம்: காஞ்சீபுரம் — ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி: 15.02.2020 — ஐஇஎச்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (ஐஇஎச்எல் என்பாய்)

TAAL ENTERPRISES LIMITED

Regd. Office : 2nd Floor, MMPDA Towers, 184, Royapettah High Road, Chennai - 600014, Tamil Nadu, INDIA
Phone : +91 44 4350 8393, **E-mail :** secretarial@taalent.co.in, **Web :** www.taalent.co.in **CIN :** L62200TN2014PLC096373

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED DECEMBER 31, 2019

(INR in lakhs, except per share data)

Sr. No	Particulars	Quarter ended		Nine months ended	Year ended
		31.12.2019	31.12.2018	31.12.2019	31.03.2019
		(Unaudited)			(Audited)
1	Total income (Net)	3,360.17	4,159.14	10,458.02	15,725.11
2	Net Profit/ (Loss) for the period (before tax, Exceptional items)	780.51	1,063.01	2,588.31	3,529.24
3	Net Profit/ (Loss) for the period before tax (after Exceptional items)	642.16	1,063.01	2,449.96	3,529.24
4	Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items)	539.59	1,053.54	1,947.24	2,178.96
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) & Other Comprehensive Income (after tax)]	546.65	1,075.09	1,966.31	2,201.14
6	Paid-up Equity Share Capital (Face value of INR 10/- per share)	311.63	311.63	311.63	311.63
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	-	4,234.11
8	Earnings per share (of INR 10/- each) Basic and Diluted (INR)	13.65	28.74	52.06	58.20

Notes:

1 Additional information on standalone financial results is as follows: *(INR in lakhs)*

Particulars	Quarter ended		Nine months ended	Year ended
	31.12.2019	31.12.2018	31.12.2019	31.03.2019
Revenue from Operations	0.10	235.17	425.30	782.40
Profit before tax	(217.98)	(0.83)	(208.49)	1236.00
Profit after tax	(217.98)	(0.83)	(208.49)	1236.00

2 The above is an extract of the detailed format of the quarterly Consolidated Financial Results filed with Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. Full format of the Standalone & Consolidated Financial Results are available on Stock Exchange website (www.bseindia.com) and also on Company's website (www.taalent.co.in).

3 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on February 13, 2020.

Place : Bangalore
Date : February 13, 2020

For TAAL Enterprises Limited
Salil Taneja
Whole Time Director

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

ESSAR

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018,
Tel.: +91-44-2535 1271 • Fax: +91-44-2535 1272 • **Email id:** eslinvestors@essar.com
CIN No.: L65990TN2005PLC071791

31 டிசம்பர், 2019–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

(₹லட்சத்தில்)

விபரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஒன்பது மாதங்கள்		முடிந்த ஆண்டு
	31.12.2019	30.9.2019	31.12.2018	31.12.2019	31.12.2018	31.03.2019
	தணிக்கையகாதது	தணிக்கையகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையகாதது	தணிக்கையாகாதது	தணிக்கையானது
செயல்பாடுகள் மூலம் வருமானம்	-	-	-	-	-	-
ஆண்டிற்கான நிகர லாபம்/(நஷ்டம்)						
(வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்)	(4.47)	(8.09)	(5.46)	(14.82)	(26.74)	71.56
வரிக்கு முன் ஆண்டிற்கான நிகர லாபம்/(நஷ்டம்)						
(விலக்கு அயிட்டத்திற்கு பின்)	(4.47)	(8.09)	(5.46)	(14.82)	(26.74)	71.56
வரிக்கு பின் ஆண்டிற்கான நிகர லாபம்/(நஷ்டம்)						
(விலக்கு ஆயிட்டத்திற்கு பின்)	(4.47)	(8.09)	(5.46)	(14.82)	(26.74)	71.56
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்						
(ஆண்டுக்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம்)	(4.47)	(8.09)	(5.46)	(14.82)	(26.74)	71.56
செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்						
(ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–)	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78
இதர ஈக்விட்டி (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக)						(1,331.54)
ஒரு பங்கு சம்பாத்தியம் (அடிப்படை) (ரூ.)	(0.031)	(0.057)	(0.038)	(0.104)	(0.187)	0.501
ஒரு பங்கு சம்பாத்தியம் (டைலூட்டட்) (ரூ.)	(0.031)	(0.057)	(0.038)	(0.104)	(0.187)	0.501
(* வருடாந்திரமல்ல)						

குறிப்பு

1. மேற்கண்ட முடிவுகள் கம்பெனியின் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 13 பிப்ரவரி 2020 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிமீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தணிக்கை செய்யப்படாத காலாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சு இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் WWW.essar.com–ல் உள்ளது.

குழுவின் சார்பாக
ஒப்பம்/–
சோமசேகர் B. மலாகி
இயக்குனர்
DIN : 07626139

தேதி : பிப்ரவரி 13, 2020
இடம் : மும்பை

பெயர் மாற்றம்

Given Name: Krishwan Suresh, தந்தை பெயர்: Suresh, பிறந்த தேதி: 25.02.1992, 1–B, அலமார் கோர்ட், 271, அவ்வை சண்மும் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GIVEN NAME: KRISHWAN, SUR NAME: SURESH,** என்று அழைக்கப்படுகிறேன்.

Given Name: Krishwan Suresh

பெயர் மாற்றம்

SANJAY SURESH SURESH KUMAR, தந்தை பெயர்: A.S. Suresh Kumar, பிறந்த தேதி: 10